உலகத்தில் நாம் கொண்டுள்ள புதிய அடையாளத்தைப் பெற்றி பெருமிதம் கொள்வோம்.



*Published by:*
Peninsular Malaysia
Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 15/2023

இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மையில் நாம் குடும்பமாக, திருஅவையாக, கத்தோலிக்கம் என்ற உணர்வால் நம்மை நிரப்பியுள்ளது. **நமது அன்றாட வாழ்வில், குடும்பங்கள், திருஅவை, அதிச க்கள், பணிக்குழுக்கள், மறை மாவட்டம், மாவட்டங்கள், நாடு மற்றும் உலகத்தில் நாம் கொண்டுள்ள புதிய அடையாளத்தைப் பற்றி பெருமிதம் கொள்வோம்.**

திருஅவையாக, கத்தோலிக்கமாக இருக்கும் நம்முடைய அடையாளத்தையும் நோக்கத்தையும் புதுப்பித்துக்கொள்வோம். தீபகற்ப மலேசியாவில் உள்ள திருஅவையின் இலட்சியம் மற்றும் குறிக்கோள் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை நாம் புதுப்பித்துக்கொள்வோம். ஏற்றுக்கொள்வோம். பெருமிதம் அடைவோம். நம்பிக்கைக் கொள்வோம். அதை நம் அன்றாட வாழ்வில் உறவுகளில் ஈடுபடுத்தி வாழ்வோம்.

நாம் ஒவ்வொருவரும் நமது தூரநோக்கிற்கும், தூதுரைக்கும் நம்பிக்கை மறுமொழி தருவோம். ஒன்றித்திருப்பது (**உள்ளடக்கியது**) பங்கெடுப்பு (**படைப்பாற்றல்**) மறைத்தூது (**உறவுகளை இணைத்தல்**) இது தான் நற்செய்தியை நாம் எடுத்துரைக்கும் வழி... இயேசு உயிர்த்தெழுந்தார் !!!

## தீபகற்ப மலேசிய திரு அவை

(நம்முடைய தூரநோக்கு மற்றும் தூதுரை அறிக்கை)

### நம்முடைய தூரநோக்கு:

*தமதிரித்துவ சமூகத்திலும் நமக்கிடையிலும் ஒன்றித்து வேரூன்றி இருத்தல்

*மனுக்குலத்தோடும் படைப்புகளோடும் ஒருமைப்பாட்டுடன் வாழ்வது

*இறையரசின் பணிக்கான நமது அழைத்தலை வாழ இந்த தூரநோக்கு நம்மை இட்டுச்செல்கிறது.

### நமது தூதுரை:

*நமது பங்குகளை 'சமூகங்களின் சமூகமாக' உருமாற்ற கிறிஸ்துவை அடித்தளமாகக் கொண்ட அடிப்படை கிறிஸ்துவ சமூகங்கள் வழி சாட்சியமாக இருப்பது

*பல்வேறு கலாச்சார , சமய, மற்றும் ஏழைகளுடன் கலந்துரையாடல் நடத்துவது

*இதன்வழி புதிய முறையில் திருச்சபை இருப்பதை நோக்கிப் பயணிப்போம்.

8 & 9 ஏப்ரல் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

## ஆண்டவரின் உயிர்ப்பின் ஞாயிறு

### மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)



மாதாந்திர கருப்பொருள்:
வாழ்வின் புதுமைத்தன்மை
நிகழ்வின் நோக்கம்:
தவக்காலம் & ஈஸ்டர் காலம்

இயேசுவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையின் உண்மைக்கு மகுடம் சூட்டுவதாகும். இது நம்பிக்கைக் கொண்டு, வாழ்ந்த முதல் கிறிஸ்தவ சமூகத்தால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டது (கமபோ எண்: 638) மேலும் இன்றும் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது.

## அனைவருக்கும் ஆசிர் நிறைந்த புனித ஈஸ்டர் நல்வாழ்த்துகள்

## அல்லேலூயா!